**களனி பல்கலைக்கழகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களனி பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 19 ஆம் பந்திக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசல்லாத பாய்ச்சலொன்றாக வெளித் தரப்பினருக்கு பொருள்சார் நன்கொடையாகா ரூபா 2,441,337 பெறுமதி வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்தது, மேலும் போதியளவு சான்றுகள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 58,700 தொகை காசு உட்பாய்ச்சலாக உள்ளடக்கப் பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீடு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 37,974,423 ஆனக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 30,930,694 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 7,043,729 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. அவ்வேறுபாட்டிற்குரிய காரணங்கள் இனங்காணப்பட்டு தேவையான கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இருப்பு மீதியுடன் பேரேட்டுக் கணக்கின் இருப்பு மீதி ஒப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்களுக்குரிய காலக்கழிவு ரூபா 22,988,000 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதன மானியங்கள் பயன்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யும் சொத்துக்களுக்காக காலக்கழிவு முறையாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | கற்பனை சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படா | 2019 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை | கற்பனை சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் |

| | | | |
|---|---|---|---|
| | திருந்ததுடன் அச்சொத்துக்களின் பெறுமதி வருடாந்தம் 20 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வருடாந்தம் கைதவிர்க்கப்படும் நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு அப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படா திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் ஏலவிற்பனையில் கிடைத்த ரூபா 427,879 தொகை சொத்துக்கள் கைதவிர்ப்புக் கணக்கிற்கு சீராக்குவதற்குப் பதிலாக ஏனைய வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அச்சொத்துக்கள் கணக்குகளிலிருந்தும் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் பதிவேட்டிளைன நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் அதன் பின்னர் சீராக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிலையான சொத்துக்கள் கைதவிர்க்கப்படும் போது சரியான பேரேட்டுக் கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற் கொள்ள வேண்டியதுடன் நிலையான சொத்துக்கள் நாளது வரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (உ) | கணனி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக மாதாந்தம் பெறுமதி சேர் வரியுடன் ரூபா 2,029,750 குத்தகைக்கு 39,000 சதுரஅடி அளவிலான கட்டிடமொன்று அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 70,514,859 தொகை மீண்டெழும் தன்மையிலான செலவினமான வாடகைக் கொடுப்பனவு மற்றும் ஏனைய மேம்படுத்தலுக்காக செலவிடப்பட்டிருந்தது. | கட்டிட வாடகை மற்றும் நவீனமயப்படுத்தல் தொகை பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிஏற்பாட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறிதத் அங்கீகாரத்தின் பேரில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டெழும் தன்மையிலான மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மூலதனம் மற்றும் மீண்டெழும் மானியங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிலையானை வப்புக்கள் | 108,347 | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் நிலையான சொத்துக்களின் உரித்து மற்றும் நிலைத்திரு தன்மை உறுதிப்படுத்தப் பட்டு குறித்த வைப்புச் சான்றிதழ், வங்கி மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் வட்டி வருமானம் பெறுவனவு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்நிலையான வைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரச வங்கிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | நிலையான வைப்பு மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 19 உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,599,159 ஆன கடன் மீதிகள் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிடப்படாத கடன் மீதி ரூபா 526,847 தொகையும் 3 ஆண்டு முதல் 5 ஆண்டகுள்கு இடைப்பட்ட ரூபா கடன் மீதி ரூபா 203,358 ஆக இருந்ததுடன் இக்கடன்களை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்க வில்லை | ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் கடன் மீதிகளை அறவிடு வதற்கும் மற்றையவர் களின் கடன் மீதிகளை சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன்மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெவ்வேறு செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்யப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட நானாவித வைப்புக்களின் பெறுமதி ரூபா 50,751,301 ஆக இருந்ததுடன் அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | ஆகக்கூடிய வகையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து எஞ்சியவற்றை எதிர்காலத்தில் வருமானத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்த வேண்டிய மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக ஆராய்ந்து தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடனேயே தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ஓராண்டிற்கு மேற்பட்டிருந்த காலம் கடந்த தீர்வு செய்யப்படாத முற்பண மீதி ரூபா 3,667,108 ஆக இருந்தது. | மீள்நிரப்பும் உறுதிச்சீட்டுக்களில் குறைபாடு காரணமாக தீர்ப்பதில் தாமதம் இடம்பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது முற்பணத்தை தீர்வுசெய்வதற்கு முறையான வேலைத்திட்ட மொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | செயற்பாடு முடிவடைந்த உடனேயே தீர்வுசெய்வ முறையான கட்டுப்பட்டு முறைமையொன்று செயற் படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

-----------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 102,103 மற்றும் 104 மற்றும் 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய 2014/நூ/1/2016 (திருத்த) ஆம் இலக்க தேசிய நூலக சேவைகள் சபையனி சுற்றறிக்கை | 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 24,721 புத்தகங்கள் மற்றும் 2003 சனவரி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் விரிவுரையாளர்களாலும் மாணவர்களாலும் பெற்றுக்கொள்ளப்பட்டு 2019 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை மீளக் கையளிக்கப்படாத 4,366 புத்தகங்கள் தொடர்பாக நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | காணாமல் போன 24,721 புத்தகங்களைப பதிவழிப்பதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரத்தை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீள கையளிக்கப்படாத புத்தகங்கள் தொடர்பாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01.05.06 ஆம் பந்தி | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 மே 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதி 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | இரண்டு ஆண்டு காலமாக ஓட்ட நிலைமையிலிருந்து நீக்கப்பட்ட 02 பேரூந்துகளை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரை கிடைத்ததன் பின்னர் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வங்கிக் கணக்குகளுக்குரிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து இருந்து வரும் ரூபா 2,905,653 கூட்டுத் தொகையான இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 75,000 தொகை 2019 ஆம் ஆண்டின் போது இனங்காணப் பட்டுள்ளதுடன் தற்போது நாளாந்தம் கணக்குகள் பரீட்சிக்கப்பட்டு இனங்காணப்படாத செலவு வைத்தல்களுக்காக வங்கியிடம் விசாரித்து உரிய சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றது | நேரடி வைப்புக்கள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 613,994,350 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 365,899,881 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 248,094,469 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு அரசின் மீண்டெழும் மானியம் ரூபா 479,933,000 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 224,439,143 ஆல் அதிகரித்தமை மற்றும் ஊழியர் சம்பளம் ரூபா 472,851,171 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தினால் விரிவுரைகளை மேவுகை செய்வதற்காக வெளிவாரி வரிவுரையாளர்கள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 47,143,233 ஆக இருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது இரண்டு பீடங்களில் 285 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 871 விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை | வெளிவாரி விரிவுரையாளர் களுக்கும் விரிவுரையாளர் களுக்கும் உரித்தாகும் வகையில் விரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கப் பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேலதிக விரிவுரைகளை நடாத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. | முறையான நடைமுறையொன்றின் கீழ் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு விரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட வேண்டியதுடன் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவு செய்வதற்கு முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நியமிக்கப்பட்ட 33 வெளிவாரி விரிவுரையாளர்களால் ஒரே விரிவுரையையே நடாத்தியிருந்ததுடன் ஒதுக்கீடு செய்த விரிவுரையாளர் மணித்தியாலங்களில் அரைப் பங்கிற்கு குறைந்த அளவு மேவுகை செய்த வெளிவாரி விரிவுரையாளர்கள் 53 ஆக இருந்தனர். மேலும் வெளிவாரி விரிவுரையாளர்கள் மற்றும் தற்காலிக விரிவுரையாளர்களின் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவு செய்வதற்காக சுயமாக மேற்பார்வை செய்யப்படும் வகையில் வருகை பதிவேடுகள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி துறையில் 99,174 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 2018 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 7,855 ஆக இருந்தது. 2003 ஆம் ஆண்டு முதல் 2018 வரை பதிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 4,587 மாணவர்கள் மீளாய்வாண்டின் போது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருந்தனர். 04 வெளிவாரி பாடநெறிகளுகக்காக கடந்த 03 கல்வியாண்டுகளுக்குரிய பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 09 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | விடைத்தாள்கள் இரண்டு பரீட்சகர்களினால் மதிபீடு செய்யப்படுவதால் புள்ளிககள் வழங்கும் தாமதம் காரணமாக பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. இத்தாமதத்தை குறைப்பதற்கு முறைமையில் விடைத்தாள்களை திருத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | பரீட்சை பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 346,500 பெறுமதியான 03 மடிக் கணனிகளைப் பெற்றுக்கொண்ட மூன்று விரிவுரையாளர்கள் 2016 ஆம் ஆண்டின் பின்னிர் சேவைலிருந்து விலகியமை மற்றும் மரணித்தமை காரணமாக மீளக் கையளித்திருக்க வில்லை. | ஒரு கணனி கையளிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய கணனிகளை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்லும் போதும் மரணிக்கும் வழங்கப்பட்ட பொருளிருப்பு பொருட்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடைமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2012 மார்ச் மாதத்தில் பல்கலைக்கழக கல்விசார் பதவியணியனிருக்காக வெளியிடப் | வெவ்வேறு காரணங்களினால் சில சந்தர்ப்பங்களில் விரிவுரை நடாத்தப்படாத போதும் கற்பவர்களுக்கு பாதிப்பு | பல்கலைக்கழக கல்வி சார் விரிவுரையாளர்களின் ஒழுக்க கோவைக்கு இணங்க விரிவுரையாளர் |

| | | | |
|---|---|---|---|
| | பட்ட ஒழுக்காற்று முறைமைக்கு இணங்க விரிவுரையாளர்களினால் பேணப்பட வேண்டிய ஆகக்குறைந்த விரிவுரை மணித்தியாலங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் குறைந்தது அம்மணித்தியாலங்கள் ஏனும் அல்லது ஒதுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ஒரு கல்வித்துறையில் 2016/2017 ஆம் ஆண்டிற்காக நிரந்தர பதவியணியனருக்கு ஒதுக்கப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்கள் 91 ஆக இருந்த போதும் 58 மணித்தியாலங்கள் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் 32 மணித்தியாலங்கள் மாத்திரம் விரிவுரைகளை நடாத்தியமையால் அந்த குறைந்த மணித்தியாலங்களின் அளவீலேனும் விரிவுரைகளை நடாத்தியிருக்க வில்லை. | ஏற்படாத வகையில் மாத்திரம் மேலதிக விரிவுரைகள் நடாத்தப்பட்டன. | களுக்காக விரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் விரிவுரைகளை நடாத்துவதை உறுதிப்படுத்தும் ஆரம்ப ஆவணம் மாணவர்களின் கையொப்ப பதிவேடாக இருந்த போதிலும் அந்த ஆவணங்களில் விரிவுரை நடாத்திய திகதி, விடய இலக்கம்., விரிவுரையாளரின் பெயர் மற்றும் கையொப்பம், விரிவுரை நடைபெற்ற நேரம், கல்வியாண்டு என்பவற்றை குறிப்பிடாத சந்தர்ப்பங்கள் பல காணப்பட்டன. | பீட அலுவலகங்களின் மூலம் பேணப்படும் கையொப்ப பதிவேடுகளில் வருகை, வெளியேறல் பதிவு செய்யப்படுவதுடன சில விரிவுரையாளர்கள் விரிவுரை நடாத்தியதை உறுதிப்படுத்து வதற்கான மாணவர் கையொப்ப பதிவேடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாணவர் கையொப்ப பதிவேடு முறையாக பேணப்பட வேண்டும் |
| (இ) | கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்வதற்காக சம்பளமற்ற கலவி விடுமுறை மற்றம் மூலதன மாயம் வழங்குவதன் மூலம் குறித்த விரிவுரையாளர்களின் உஅறிவு வளர்க்கப்பட்டு அந்த அறிவினை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்காக மனித வள அபிவிருத்தி செய்வதால் நாட்டின் மொத்த மனித மூலதன அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் 12 விரிவுரையாளர்கள் அத்தகைமையை பூர்த்தி செய்யாமல் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடடிருந்தனர். மேலும் குறித்த பட்டத்தை பூர்த்தி செய்வதன் மூலம் இத்தகைமை பூர்த்தி | 08 விரிவுரையாளர்கள் எதிர்காலத்தில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 04 விரிவுரையாளர்கள் கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்துள்ளனர். | கலாநிதி பட்டத்தை குறித்த காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்ததாக தீர்மானிக்கப்படுவதுடன் இவ்விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழத்திற்கு இடையே ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை பெறுமதி ரூபா 54,791,505 ஆக இருந்தது. | | |
| (ஈ) | 2008 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட பதவியணி உறுப்பினரொருவர் பல்கலைக்கழகத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிற்கு 2015 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகம் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது. நிர்வாக சபையின் தீர்மானத்தின் பேரில் 2017 ஆம் ஆண்டின் போது இவ்வழக்கு வாபஸ்பெறப்பட்டு ரூபா 7,649,419 நிலுவை சம்பளத்துடன் மீண்டும். அந்த உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடுன் வழக்கு கட்டணமாக ரூபா 125,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வழக்கினை இணக்கத்திற்கு கொண்டு வருவதற்கு நிர்வாக சபை தீர்மானித்திருந்ததுடன் அதன் பிரகாரம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. | வழக்குத் தீர்ப்பு கிடைத்ததன் பின்னர் மேலுமொரு வழக்கை தொடுக்கும் போது முன்னர் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக வழக்கு தொடருவதற்குள்ள இயலுமை கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்திற்குரிய 500 ஆண் மாணவர்களுக்கு வசதியுடன் கூடிய விடுதியொன்றுக்கு 328 மாணவர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்ததுடன் மேலும் 172 பேரை சேர்த்துக் கொள்வதற்கு வசதிகள் இருக்கும்போது 114 மாணவர் களுக்காக வேறு விடுதியொன்று 2016 ஆம் ஆண்டில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக வருடாந்தம் ரூபா 1,500,000 ஆன வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மாணவர்களின் சர்ச்சைக்குரிய நிலைமைகளிலிருந்து தவிர்க்கும் நோக்கில் புறம்பான விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தின் விடுதிகளிலிருந்து கூடிய பயன்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சமூக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையும் கற்கை நேர அட்டவணைகளில் விரிவுரை மணித்தியாலங்கள் வேறாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விரிவுரையாளர் சேவையில் | விரிவுரையாளரால் கல்வி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு பெறப்பட்டுள்ளது. | விரிவுரைகள் நடாத்தியமைக்காக எழுத்துமூல சான்றுகள் பேணப்பட வேண்டும் |

ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரேயொரு சான்றாக, 2009 ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 20 ஆய்வுக்கட்டுரைகளைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகளும் 306 விடைப்பத்திரங்களை பரீட்சித்தலும் மாத்திரமாக இருந்தன. 2014 சனவரி முதல் 2018 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் எனினும், இந்தக் காலப்பகுதியில் எவ்வித சேவையொன்றையும் பெற்றுக்கொள்ளாமல் அவருக்கு சம்பளம் மற்றும் சகல படிகளுமாக ரூபா 6,186,190 செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,639,993 கூட்டுத்தொகையான 17 மீதிகள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டு வரையான காலப்பகுதி முதல் பயன்பாடற்று காணப்பட்டது. . | ஆராய்ச்சிகளை மேற்கொள்ளாமை, விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்லல் மற்றும் சில ஆராய்ச்சி முடிவடைந்தமை போன்ற காரணங்களினால் இந்நிதி ஏற்பாடு பயன்படுத்தப் படவில்லை. | ஆராய்ச்சி மானியங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் செயலாற்றலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் புலமைப்பரிசில் நிதியம் மற்றும் நன்கொடை நிதியங்கள் தொடர்பாக 38 வட்டிக் கணக்குகளின் மீதி ரூபா 3,963,437 மற்றம் ரூபா 5,526,486 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதில் முறையே ரூபா 187,800 மற்றும் 18,500 வீதம் மொத்தம் ரூபா 206,300 மாத்திரமாக இருந்தமையால் கணக்கு தாபித்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பரிசு நிதியங்கள் மற்றம் புலமைப்பரிசில் நிதியம் என்பன பொது நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டு பொதுக் கொள்கையொன்றின் கீழ் செயற்படுத்துவதற்கான இயலுமை கருத்திற் கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கத்திற்காக பணத்தை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட வேண்டும். |
| (இ) | பாளி மற்றும் பௌத்த கல்விப் பிரிவின் வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 5,423,868 தொகையான மானியமொன்றும் 2013 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,026,890 தொகையான மற்றுமொரு மானியம் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்ட நிதியம் கிடைக்காமையால் ஆரம்பத்தலில் தாமதித்திருந்ததுடன் எதிர்காலத்தில் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த நோக்கத்திற்காக மானியத்தை பயன்படுத்த செயற்படுத்த வேண்டும். |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடனான ஆதங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 1,971,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், ரூபா 1,232,072 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள், ரூபா 5,468,400 பெறுமதியான கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | ஆராய்ச்சிகளை மேற் கொள்ளாமை, விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்லல் மற்றும் சில ஆராய்ச்சி முடிவடைந்தமை போன்ற காரணங்களினால் இந்நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட வில்லை. | ஆராய்ச்சி மானியங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் செயலாற்றலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சமூக விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர்களுக்காக ரூபா 11,959,101 செலவு செய்து கொள்வனவு செய்த 110 கணனிகளில் 07 கணனிகள் 2018 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 (ஆ) பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சும் ஒவ்வொரு கொள்வனவிற்காகவும் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் ரூபா 19,083,441 பெறுமதியான 9 கொள்வனவுகளுக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கிவல்லை. | இவ்விடயம் தொடர்பாக இணங்குவதுடன் எதிர்வரும் காலங்களில் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 (ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் வருமானத்தை பரீட்சிக்கும் போது 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் பாதிடப்பட்ட வருமானம் முறையே ரூபா 650,554,000 மற்றும் ரூபா 597,000,000 ஆக இருந்த போதிலும் உள்ளவாறான வருமானம் முறையே ரூபா 1,102,741,737 மற்றும் ரூபா 1,497,728,000 ஆக இருந்தமையால் 69.5 சதவீதம் மற்றும் 150 சதவீதமான விலகல் அவதானிக்கப்பட்டது. | தவிர்க்க முடியாத காரணங்கள் பேரில் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடு முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி யொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

**3.8 நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்கலும் செயற்பட வேண்டியிருந்தது அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் தனது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் முறையாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை விநியோகிப்பதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டு முதல் நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/ எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |